பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
27 12 2024 **FRIDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங்கின் மறைவுக்கு அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகள் இரங்கல் தெரிவித்துள்ளன.
- தடைகளை கடந்து வாழ்வில் மிகப் பெரிய சாதனைகளை புரிந்து எதிர்கால தலைமுறைக்கான உதாரணமாக டாக்டர் மன்மோகன் சிங் திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.
- இந்திய வங்கிகள் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக லாபகரமாக செயல்பட்டு வருவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
- பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரம் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

மறைந்த முன்னாள் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் மறைவை ஒட்டி ஏழு நாள் துக்கம் அனுசரிக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது.

அன்னாரது இறுதிச்சடங்கு அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடுமுழுவதும் அரசு நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்படுவதாகவும், தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

மேலும், அன்னாருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் இன்று நடைபெறுகிறது.

இதற்கிடையே, தில்லி எய்ம்ஸ் மருத்துவமனையில் காலமான மன்மோகன் சிங்கின் உடல் இன்று அவரது இல்லத்தில் அஞ்சலி செலுத்தும் வகையில் வைக்கப்பட்டுள்ளது.

மன்மோகன் சிங் உடலுக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜெக்தீப் தங்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி விடுத்துள்ள காணொலிப் பதிவில், தடைகள் பல கடந்து வாழ்வில் மிகப் பெரிய உயரங்களை எட்டி, எதிர்கால தலைமுறைக்கான உதாரணமாக டாக்டர் மன்மோகன் சிங் திகழ்வதாக புகழஞ்சலி செலுத்தியுள்ளார்.

மேலும், மாபெரும் தலைவராகவும், பொருளாதார நிபுணராகவும் அவர் என்றென்றும் நினைவுகூரப்படுவார் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ஜெ.பி. நட்டா, திரு. ராஜ்நாத்சிங், திரு. ஜோதிராதித்ய சிந்தியா, காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியின் முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தி, திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்கள் பலர் அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

மறைந்த மன்மோகன் சிங்கிற்கு அஞ்சலி செலுத்தும் வகையில், நாளை அவரது உடல் தில்லி காங்கிரஸ் தலைமையகத்தில் வைக்கப்படும் என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

அன்னாரது இறுதிச்சடங்கு நாளை புதுதில்லியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, மன்மோகன் சிங் மறைவுக்கு பல நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

அமெரிக்காவின் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஆன்டனி பிலிங்கன் வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய – அமெரிக்க உறவை கட்டமைத்ததில் மன்மோகன் சிங்கின் பங்கு அளப்பரியது என்று தெரிவித்துள்ளார்.

பிரேஸில் அதிபர் திரு. **Lula da Silva** வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், இரு நாடுகளுக்கு இடையேயான உறவை மேம்படுத்தும் வகையில் அவருடன் இணைந்து பணியாற்றியதாகவும் உலக அளவில் வளர்ச்சியை ஏற்படுத்தும் பொருட்டு பலமுறை விவாதித்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தான் முன்னாள் அதிபர் திரு. ஹமீத் கர்சாய் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், டாக்டர் மன்மோகன் சிங் ஆப்கானிஸ்தானின் உற்ற நண்பராக விளங்கினார் என்று தெரிவித்துள்ளார்.

மாலத்தீவு முன்னாள் அதிபர் திரு. முஹமது நஸீத் வெளியிட்டுள்ள பதிவில், ஒரு தந்தைக்குரிய இடத்திலிருந்து தம்மை அவர் வழிநடத்தியதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கான ரஷ்ய தூதர் திரு. டெனிஸ் அலிபோவ் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தனது சிறப்பான பொருளாதார நிபுணத்துவம் மூலமாக இந்தியாவின் முன்னேற்றத்தில் அவர் பெரும்பங்காற்றியதாக தெரிவித்துள்ளார்.

**<<<<<<>>>>>>**

இந்திய வங்கிகள் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக லாபகரமாக செயல்பட்டு வருவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்த வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய வங்கிகள் வலுவான நிதி நிலைமையை கொண்டிருப்பதாகவும், கடன்கள் மற்றும் சேமிப்புகளில் நிலையான வளர்ச்சியை கண்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

சொத்துக்களின் தரம் முன்னேற்றம் கண்டு வருவதாகவும், அசையா சொத்துக்களின் மொத்த விகிதம் 2 புள்ளி ஏழு சதவீதமாக உள்ளதாகவும் ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

**<<<<<<>>>>>>**

தமிழகத்தில் சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரம் தொடர்பாக விளக்கம் அளிக்குமாறு தமிழக அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக, நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், வி. லக்ஷ்மி நாராயணன் ஆகியோர் அடங்கிய அமர்வு தாமாக முன்வந்து இன்று வழக்கு விசாரணை மேற்கொண்டது.

இந்த வழக்கில் தமிழக உள்துறைச் செயலாளர், மாநில காவல்துறை தலைவர் ஆகியோர் இன்று விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

**<<<<<<>>>>>>**

இதற்கிடையே, அண்ணா பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமைக்கு உள்ளானதை கண்டித்து, கோவையில் பிஜேபி மாநிலத் தலைவர் திரு. அண்ணாமலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தில் பெண்கள் மீதான குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

மேலும், கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் இன்றைய தலைமுறை பின்தங்கியிருப்பதாக திரு. அண்ணாமலை கூறினார்.

**<<<<<<>>>>>>**

தமிழகத்தில் பல்கலைக் கழக மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் தேசிய மகளிர் ஆணைய விசாரணைக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்பு அளிக்கும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி செழியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

இதற்கிடையே, சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து அதன் செயலாளர், பதிவாளர், பேராசிரியர்களுடன் அமைச்சர் இன்று ஆலோசனை நடத்தினார்.

<<<<<<>>>>>>

தேசிய அறிவியல் நாடக விழா புதுதில்லியில் இன்று தொடங்குகிறது.

அறிவியலையும், கலையையும் இணைக்கும் விதமாக நடைபெறும் இந்த நாடக விழாவின் ஒரு பகுதியாக, நாடு முழுவதும் பல கட்டங்களாக நாடக போட்டிகள் நடத்தப்பட்டன.

இதில் வெற்றிபெற்ற குழுக்கள் இன்றும் நாளையும் நடைபெறும் இந்த விழாவில் பங்கேற்கின்றன.

<<<<<<>>>>>>

குஜராத் மாநிலம், போர்பந்தரிலிருந்து 311 கிலோமீட்டர் தொலைவில் கடலில் மூழ்கிய படகிலிருந்து 9 பேரை கடலோர காவல்படை மீட்டது.

குஜராத் மாநிலம், முன்ட்ரா பகுதியிலிருந்து ஏமன் நாட்டிற்கு அந்த கப்பல் சென்று கொண்டிருந்த நிலையில், கடல் கொந்தளிப்பு காரணமாக, கடல்நீர் படகிற்குள் புகுந்ததால் மூழ்கியது.

மீட்புப் பணியை மும்பை மற்றும் பாகிஸ்தானின் கராச்சியைச் சேர்ந்த கடல்சார் மீட்பு ஒருங்கிணைப்பு மையங்கள் இணைந்து மேற்கொண்டதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் நடப்பு பருவத்தில், ஒரு டன் கரும்புக்கு 5000 ரூபாய் கொள்முதல் விலை கிடைக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், கரும்பு கொள்முதலின் போது, குறைந்தபட்ச ஆதரவு விலை வழங்கப்படும் என்ற தேர்தல் வாக்குறுதியை திமுக அரசு செயல்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தில்லியில் இன்று காலை காற்று மாசு தரம் மிக மோசமான அளவை எட்டியதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

காலை 10 மணியளவில் காற்று மாசு தரக்குறியீடு 371ஆக பதிவானதாக அந்த வாரியம் கூறியுள்ளது.

இதற்கிடையே, இன்று காலை தில்லியில் பல்வேறு பகுதிகளில் லேசான மழை பெய்தது.

அங்கு அடுத்த 24 மணிநேரத்திற்கு இடிமின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

ராஜஸ்தான் கிழக்குப் பகுதி, பஞ்சாப், மத்தியப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதி, ஹரியானா, சண்டிகர், தில்லி, மஹாராஷ்ட்ரா, குஜராத் ஆகிய மாநிலங்களில் பலத்த காற்றுடன் இன்று மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் இரவு மற்றும் காலை நேரங்களில் பனிமூட்டம் காணப்படும் என்று அது கூறியுள்ளது.

ஹிமாச்சலப்பிரதேசத்தில் கடும் குளிர் நிலவக்கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

கேரள மாநிலம், திருவனந்தபுரம் புறநகர் பகுதியில், நடப்பாண்டில் 23 பழங்குடியினர் தற்கொலை செய்து கொண்ட விவகாரம் குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் தாமாக முன்வந்து விசாரணை மேற்கொள்கிறது.

இதுகுறித்து இரண்டு வாரங்களுக்குள் விரிவான அறிக்கை தாக்கல் செய்யுமாறு கேரள மாநில தலைமைச் செயலாளர், காவல்துறை இயக்குநர் ஆகியோருக்கு அந்த ஆணையம் நோட்டீஸ் அனுப்பியுள்ளது.

கடந்த 2011ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பெரிங்கமாலா பஞ்சாயத்துப் பகுதியில் மட்டும் அதிகபட்சமாக 138 பழங்குடியினர் தற்கொலை செய்து கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இரண்டாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அப்பகுதியில் தற்கொலை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக தேசிய மனித உரிமைகள் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது.

**<<<<<<>>>>>>**

அஹமதாபாத் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைஷ்ணவி அட்கர் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதியாட்டத்தில் அவர், மற்றொரு இந்திய வீராங்கனையான ஜீல் தேசாயை 6-0, 6-2 என்ற நேர்செட்கணக்கில் வென்றார்.

மற்றொரு அரையிறுதியில் டென்மார்க்கின் **Elena Jamshibi,** ரஷ்யாவின் **Yashina-**வை 6-3, 3-6, 6-4 என்ற செட்கணக்கில் தோற்கடித்தார்.

**<<<<<<>>>>>>**

மெல்போர்னில் நடைபெற்று வரும் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான இன்று, இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் சற்றுமுன் வரை 4 விக்கெட் இழப்புக்கு 159 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, 6 விக்கெட் இழப்புக்கு 311 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் ஆட்டத்தை தொடங்கிய ஆஸ்திரேலியா அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து முதல் இன்னிங்ஸில் 474 ரன் எடுத்தது.

இந்தியாவின் பும்ரா 4 விக்கெட்டுகளையும், ஜடேஜா 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

**<<<<<<>>>>>>**

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்ற வெஸ்ட் இண்டீஸ் அணி முதலில் பேட் செய்து வருகிறது.

வதோதராவில் நடைபெற்று வரும் இப்போட்டியில் அந்த அணி சற்றுமுன்வரை 36 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 152 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<>>>>>>**

கிங் கோப்பை சர்வதேச பேட்மிண்டன் போட்டி சீனாவில் இன்று தொடங்குகிறது.

**Shenzhen** நகரில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷா சென் பங்கேற்கிறார்.

வரும் 29ஆம் தேதிவரை இப்போட்டி நடைபெறுகிறது.

**<<<<<<>>>>>>**

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதிப் போட்டிகளில் ஹரியானா – உத்தரபிரதேசத்தையும், தில்லி – பாட்னாவையும் எதிர்கொள்கின்றன

**<<<<<<>>>>>>**